SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: ஆசைப்பத்து**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

கருடக்கொடியோன் காண மாட்டாக்
கழற்சேவடி என்னும்
பொருளைத் தந்துஇங்கு என்னை ஆண்ட
பொல்லா மணியே ஓ
இருளைத் துரந்திட்டு இங்கேவா என்று
அங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை
என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு இருக்க கில்லேன்
கூவிக்கொள்ளாய் கோவேயோ
எப்பாலவர்க்கும் அப்பாலாம் என்
ஆரமு தேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

சீவார்ந்து ஈமொய்த்து அழுக்கொடு திரியுஞ்
சிறுகுடில் இது சிதையக்

THIRUVASAGAM GROUP

Scan this QR code using the WhatsApp Camera to join this group

கூவாய் கோவே கூத்தா காத்து
ஆட்கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க்கு அரியானே சிவனே
சிறிதுஎன் முகம்நோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

மிடைந்து எலும்பு ஊத்தைமிக்கு அழுக்குஊறல்
வீறிலி நடைக்கூடம்
தொடர்ந்து எனைநலியத் துயர் உறுகின்றேன்
சோத்தம் எம்பெருமானே
உடைந்துநைந்து உருகி உன்ஒளி நோக்கி
உன்திரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

அளிபுண் அகத்துப் புறந்தோல் மூடி
அடியேன் உடையாக்கை
புளியம்பழம் ஒத்திருந்தேன் இருந்தும்
விடையாய் பொடிஆடி
எளிவந்து என்னை ஆண்டு கொண்ட
என் ஆரமுதேயோ
அளியேன் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

எய்த்தேன் நாயேன் இனிஇங்கு
இருக்க கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச் சேவடியானே
முத்தா உன்தன் முகஒளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே பரஞ்சோதி
வாராய் வாரா உலகம் தந்து
வந்து ஆட்கொள்வானே

பேரா யிரமும் பரவித் திரிந்து
எம்பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

கையால் தொழுதுஉன் கழல்சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என்தன் தலைமேல் வைத்து
எம்பெருமான் பெருமான் என்று
ஐயா என்றன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகுஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

செடிஆர் ஆக்கைத் திறம்அற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடிஆர் சோதி கண்டு கொண்டுஎன்
கண்ணிணை களிகூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே உன்
பழ அடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

வெஞ்சேல் அனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே
நான்ஓர் துணைகாணேன்
பஞ்சேர் அடியாள் பாகத்து ஒருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***